செய்தி வெளியீடு எண்.21-2018 நாள்: 12.03.2018

**விழுப்புரம் மாவட்டம் வேலைவாய்ப்புத்துறையின் மூலம் தென்னிந்திய இரயில்வே துறையால் அறிவிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியலாளர், உதவி லோகோ பைலட் மற்றும் தொகுதி – D போன்ற பல்வகைப்பட்ட பணிக்காலியிடங்கள் அடங்கிய போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

******

விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தில், அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்கும், இலவச சிறப்பு பயிற்சி வகுப்புகள், தகுதி வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்பினை பயன்படுத்தி படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பலர் அரசுப் பணிகளில் சேர்ந்துள்ளனர்.

தென்னிந்திய இரயில்வே துறையால் அறிவிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியலாளர், உதவி லோகோ பைலட் மற்றும் இரயில்வே தொகுதி-D-ல் அடங்கிய பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு 16.03.2018 முதல் இலவச பயிற்சி வகுப்பு விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் நடைபெற உள்ளது.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயனடைய விரும்பும் நபர்கள் இரயில்வே பணிக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகலுடன் 14.03.2018-க்குள் விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுகி பதிவு செய்துகொள்ளலாம். விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த படித்த இளைஞர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.